www.agaram.lk

FWC

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

## ஐந்தாம் தவணைப் பரீட்சை - 2022

## Conducted by Field Work Centre, Thondaimanaru.

## 5th Term Examination - 2022

இலங்கை வரலாறு I

Sri Lankan History I

Three Hours ten min

Gr -13 (2022)

25 | T | I

கவனிக்க.

- எல்லா வினாக்களுக்கும் இவ் வினாத்தாளிலேயே விடை அளிக்குக..
- சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிந்தெடுக்க.
- வழங்கப்பட்டுள்ள நேரம் பகுதி I, பகுதி II இற்கும் உரியதாகும்.

### பகுதி – I

❖ *1 – 10* வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து பெயர்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அப்பெயர்கள் ஒன்று ஏதோ ஒரு காரணத்தினால் ஏனையவற்றுடன் பொருந்தாது. பொருந்தாத அப்பெயரை இனங்கண்டு அதன் இலக்கத்தை அடைப்புப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

1) 1. ஆர்ப்பாக்கம் கல்வெட்டு 2. பல்வராயன் பேட்டைக் கல்வெட்டு 3. திருவலங்காடு கல்வெட்டு 4. சிதம்பரம் கல்வெட்டு 5. இராமேஸ்வரம் கல்வெட்டு ( )

2) 1. முதல் புளஹத்தன் 2. பிளைய மாறன் 3. பாகிய 4. பல்லுகன் 5. பளைய மாறன் ( )

3) 1. தகபதி 2. சுங்கம் 3. தகபக 4. மதரே மஜிபிகபதி 5. உதகபதி ( )

4) 1. கந்தவுறு நுவர 2. ஜனநாதபுரம் 3. நயினாதீவு 4. ஜனநாத மங்களம் 5. புலத்தி நகரம் ( )

5) 1. நியங்கம்பாய 2. ததிகம கொட்ட வெயிர 3. திவங்க பிலிமாகே 4. உத்தரராமய 5. தமில் மகாசாய ( )

6) 1. உறுவெல 2. பல்லேமலல 3. பதிராஜ வெல 4. மினிஹாகல்கந்த 5. பெல்லன் பெதிபலஸ்ஸ ( )

7) 1. மகாதித்த 2. கோகண்ணதித்த 3. சூகரதித்த 4. கச்சகதித்த 5. கலாதித்த ( )

8) 1. வம்சப்பமாசினி 2. சமந்தபாஸாதிகா 3. மனோரத பூரணீ 4. சம்மோகவினோதணீ 5. சுமங்கல விலாசிணீ ( )

9) 1. சிலப்பதிகாரம் 2. ஆர்ப்பாக்கம் 3. மணிமேகலை 4. பதிற்று பத்து 5. பட்டினப் பாலை ( )

10) 1. உபோசதகர 2. ஜன்தாகர 3. பிரதிமாகர 4. போதிகர 5. சூதிகர ( )



Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

- **இல 11 தொடக்கம் 15 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து சோடிப் பெயர்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சோடியிலுள்ள பெயர்கள் ஒன்றுடனொன்று பொருந்தவில்லை. அச்சோடியைத் தெரிந்து அதன் இலக்கத்தை அடைப்புப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

11) 1. புதுசரண - குருளு கோமி
2. சத்தர்ம ரத்னா வலிய - தர்மசேன தேரர்
3. யாழ்ப்பாண வைபகமாலை - மயில்வாகனப் புலவர்
4. ரஸவாவினி - வேதேக தேரர்
5. பரசவி சற்தேஸ - ஸ்ரீ ராகுல தேரர் ( )

12) 1. தூபராம - தேவநம்பிய தீசன்
2. அபயகிரி - வட்டகாமினி அபயன்
3. ஜேதவன - மகாசேனன்
4. ரல்கொத் விகாரை - நிஸங்கமல்லன்
5. கடலாதெனி விகாரை - 6ம் பராக்கிரமபாகு ( )

13) 1. 1ம் இராஜசிங்கன் - திக்கிரி பண்டார
2. 2ம் இராஜசிங்கன் - ஆஸ்தான இளவரசன்
3. 6ம் புவனோகுபாகு - சப்புமல் குமாரன்
4. 9ம் தர்மபராக்கிரமபாகு - அம்புலுகல குமாரன்
5. ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கன்- கண்ணுச்சாமி ( )

14) 1. மகாபோதி சமாகம - D.P ஜயதிலக
2. சிலாபத்து மக்கள் சங்கம் - விக்ரர் கொறேயா
3. இலங்கை தேசிய தாங்கிரஸ் - பொன்னம்பலம் அருணாசலம்
4. இலங்கை தொழிளாலர் ஒன்றியம் - A.E. குணசிங்க
5. தமிழ் காங்கிரஸ் - G.G பொன்னம்பலம் ( )

15) 1. சங்கமித்த தேரர் - மகாசேனனின் போதனாசிரியராக இருந்த இந்திய பிக்கு
2. பாகியன் தேரர் - பிக்குவான ஜப்பான் நாட்டுப் பிரயாணி
3. வஜ்றிரபோதி - மகாயானம் பரப்பிய இந்திய பௌத்த துறவி
4. புத்தகோஷ தேரர் - சமந்த பாசாதிகாவை எழுதிய இந்திய பௌத்த துறவி
5. S. மகிந்த தேரர் - தீபெத் நாட்டு பௌத்த துறவி ( )

- **இல 16 – 20 வரையான ஒவ்வொரு வினாவுக்கும் X ,Y என நிரல்களில் பொருந்தக்கூடிய வகையில் தொடர்படுத்தும் போது வரும் சரியான சேர்மானத்தின் விடையை இனங்கண்டு அவற்றுக்குரிய இலக்கத்தை அடைப்புப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

16)

| X | Y |
|---|---|
| 1. ஊர்காவற்றுறை | A. மாதோட்டம் |
| 2. ஜம்புகோளப்பட்டினம் | B. கயிட்ஸ் |
| 3. மகாதித்த | C. மாத்தறை |
| 4. பீமதித்த | D. பெந்தோட்டை |
| 5. நில்வளதித்த | E. சம்பிலித்துறை |

1. EDABC 2. DEACB 3. CBDAE 4. CDAEB 5. BEADC ( )

17)

| X | Y |
|---|---|
| 1. புதுசரண | A. குருணாகல் காலம் |
| 2. சத்தர்ம | B. கோட்டை காலம் |
| 3. தலதாசிரித | C. கம்பளைக் காலம் |
| 4. மயூர சந்தேச | D. பொலன்னறுவைக் காலம் |
| 5. காவிய சேகர | E. தம்பதெனிய காலம் |

1. CDABE 2. DEACB 3. CBDAE 4. CDAEB 5. BEADC ( )



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

18) X Y

1. மயூரபாத பிரிவெனா A. தொட்டகமுவ
2. பத்மாவதி பிரிவெனா B. தெவிநுவர
3. விஜயபாகு பிரிவெனா C. வாகிரிகல
4. சுனேத்திராதேவி பிரிவெனா D. காரகல
5. இருகல்குலதிலக பிரிவெனா E. பப்பிலியான

1. EDABC 2. DEACB 3. CBDAE 4. CDAEB 5. BEADC ( )

19) X Y

1. 1562 A. பலனப் போர்
2. 1594 B. கன்னொறுவப் போர்
3. 1602 C. முல்லேரியாப் போர்
4. 1630 D. தந்துரைப் போர்
5. 1638 E. ரந்தெனிவெல போர்

1. EDABC 2. DEACB 3. CBDAE 4. CDAEB 5. BEADC ( )

20) X Y

1. மடிகே பத்த A. நெசவுக்கான வரி
2. குருவே பத்த B. சலவைக்கான வரி
3. படஹெல பத்த C. வனைதலுக்கான வரி
4. ரீ பத்த D. யானை பிடித்தலுக்கான வரி
5. ஹெந்த பத்த E. போக்குவரத்துக்கான வரி

1. BDEAC 2. CDAEB 3. EDCBA 4. AEDBC 5. EBACD ( )

- **இல 21 – 25 வரையுள்ள எல்லா வினாக்களுக்கும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று உரிய தலைப்பிற்கு பொருந்தவில்லை. அதனைத் தெரிந்து அதன் இலக்கத்தை அடைப்புப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

21) ராஜரட்ட நாகரிகத்தின் தளர்ச்சியும் வீழ்ச்சியும்
1. சந்திரபானுவின் படையெடுப்பு.
2. நிர்ப்பாசன முறையின் சீர்குலைவு
3. கலிங்க பாண்டிய வம்சங்களுக்கிடையிலான பகைமை
4. பலவீனமான அரசர்கள்
5. மாகனின் படையெடுப்பு ( )

22) யாழ்ப்பாண இராச்சியம்
1. யாழ்ப்பாண வைபவமாலை யாழ்ப்பாணத்தின் பழைய வரலாற்றை படிபதற்கான பிரதான மூலம் ஆகும்.
2. அதன் இராசதானி நல்லூர் ஆகும்.
3. ஆரியச்சக்கரவர்த்தி அரசர்கள் அதிக பலம் கொண்டவர்கள்.
4. ஆரியச்சக்கரவர்த்தி அரசர்கள் கம்பளை இராச்சியத்தின் மீது படையெடுத்தார்கள்
5. அழகேஸ்வரன் யாழ்ப்பாண இராச்சியத்தை கைப்பற்றினான் ( )

23) நாயக்கர் வம்சம்.
1. 1ம் அரசன் விஜயராஜசிங்கன் ஆவான்.
2. நாயக்க மன்னர்கள் தென்னிந்திய குடும்பங்களோடு தொடர்ந்தும் திருமணத் தொடர்புகளை ஏற்படுத்தினர்.
3. கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் பௌத்தம்/ பௌத்த பண்பாடு ஆகியவற்றின் பேராதளவாளன்.
4. நரேந்திர சிங்கன் இறுதி நாயக்க மன்னனாவான்.
5. ராஜதிராஜ சிங்கனின் காலத்திலே பிரித்தானியர் கரையோர மாகாணங்களை கைப்பற்றினர். ( )



agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

24) சீதாவாக்கை இராச்சியத்தின் வளர்ச்சியிலுள்ள பிரதான கட்டங்கள்
1. விஜயபாகு கொள்ளய 1521
2. 1538 இல் மாயதுன்னை றைகமவை சீதாவாக்கையோடு இணைத்தமை.
3. ராஜசிங்கன் 1582 இல் கண்டியின் மாகாணங்களை கைப்பற்றியமை
4. போர்த்துக்கேயருக்கு எதிரான முல்லேரியாப் போரில் 1562 இல் வெற்றி பெற்றமை
5. 1604 இல் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியமை ( )

25) பிரித்தானியர் காலத்தில் பெருந்தோட்ட பயிர்செய்கை
1. பிரித்தானியரின் நில விற்பனைக் கொள்கையோடு பெருந்தோட்ட விவசாயம் அபிவிருத்தியடைந்தது.
2. போக்குவரத்து துறை அபிவிருத்தி பெருந்தோட்ட விவசாயம் என்பன பரஸ்பர தொடர்புடையவை.
3. சர்வதேச சந்தையில் கிடைத்த வாய்ப்புகள் பெருந்தோட்ட விவசாய விருத்திக்கு ஏதுவாக இருந்தன.
4. சேர் ஹென்றிவாட் என்பவரால் முதலாவது கோப்பித்தோட்டம் தொடங்க பெற்றது.
5. குறைந்த வேதனத்தில் தென்னிந்தியாவிலிருந்து தொழிலானரைப் பெற்றுக் கொள்ள முடிந்தது.
( )

- **இல 26 – 30 வரையுள்ள ஒவ்வொன்றிற்கும் (A) (B) (C) (D) என்னும் நான்கு விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று அல்லது பல சரியான விடைகளும் சரியான விடையை அல்லது விடைகளைத் தெரிவு செய்க.**

(A) யும் (B) மட்டும் சரியாயின் 1 எனவும்
(B) யும் (C) மட்டும் சரியாயின் 2 எனவும்
(C) யும் (D) மட்டும் சரியாயின் 3 எனவும்
(A) யும் (C) மட்டும் சரியாயின் 4 எனவும்
ஒரு விடை மட்டும் அல்லது இரண்டிற்கு மேற்பட்ட விடைகள் சரியாயின் 5 எனவும் புள்ளிக்கோட்டில் எழுதுக.

| அறிவுறுத்தல்களின் சுருக்கம் | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| (A) யும் (B) யும் மட்டும் சரி | (B) யும் (C) யும் மட்டும் சரி | (C) யும் (D) யும் மட்டும் சரி | (A) யும் (C) யும் மட்டும் சரி | ஒரு விடை மட்டும் அல்லது இரண்டிற்கு மேற்பட்ட விடைகள் சரி |

26) வலசும்பாவின் ஆட்சி தொடர்பான மேல்வரும் கூற்றுக்களில் எது/ எவை சரியானது/ சரியானவை
A) இளவரசியான ஹேமமாலா புனித தந்ததாதுவை இலங்கைக்கு கொண்டு வந்தான்.
B) ஏழு தமிழ்ப் பிரதானிகள் இலங்கை மீது படையெடுத்தனர்.
C) திரிபிடகம் எழுதப்பட்டது.
D) மோரியருக்கும் இலம்பகர்ணருக்கும் இடையிலான தகராறு ஆரம்பித்தது. ( )

27) சீதாவாக்கை இராச்சியத்தின் வீழ்ச்சி தொடர்பாக மேல்வரும் கூற்றுக்களில் எது/ எவை சரியானது/ சரியானவை
A) 1ம் ராஜசிங்கனது சாதனைகளை உறுதிப்படுத்தக்கூடிய வாரிசு இல்லாமை.
B) 1ம் ராஜசிங்கன் சைவனாகச் சமயம் மாறியமை.
C) சீதாவக்கை இராச்சியத்தின் பிரதேசங்களைப் போர்த்துகேயர் கைப்பற்றியமை.
D) 1ம் விமலதர்ம சூரியனின் எழுச்சி ( )

28) கம்பளைக் காலம் தொடர்பான மேல்வரும் கூற்று/ கூற்றுகளில் எது/ எவை சரியானது/ சரியானவை
A) நான்காம் புவனேகபாகு கம்பளைய இராசதானியாக்கினான்.
B) தெவி நுவரவில் உபுல்வ கோயில் அமைக்கப்பட்டமை.
C) யாழ்ப்பாணத்து ஆரியச்சக்கரவர்த்தி கம்பளை இராச்சியத்தின் சில பகுதிகள் மீது படையெடுத்தமை.
D) கிராஹம்ச சந்தேசியங்கள் எழுதப்பட்டன. ( )



agaram.lk

29) 19ம் நூற்றாண்டிலே பெருதோட்டப் பயிர்ச் செய்கை பரவியமை தொடர்பான மேல்வரும் கூற்று/ கூற்றுக்களில் எது/ எவை சரியானது/ சரியானவை

A) அந்நியதேசத்தவரின் முதலீடு அந்நியதேசத் தொழிளாலரின் சேவை என்பவற்றை ஆதாரமாகக் கொண்டே ஆரம்பத்திற் பெருந்தோட்டங்கள் அமைக்கப்பட்டன.

B) 19ம் நூற்றாண்டின் முடிவிலே தேயிலைச் செய்கை பெருந்தோட்ட பயிர்ச் செய்கையில் முதன்மை நிலையை அடைந்தன.

C) மலை நாட்டுப் பெருந்தோட்ட உற்பத்திப் பொருட்கள் பெருமளவிலே திருகோணமலைத் துறை முகத்தினூடாகவே ஏற்றுமதி செய்யப்பட்டன.

D) கோப்பிய பயிர் செய்கை வீழ்ச்சியடைந்த பின் கண்டிப் பிரதேசங்களில் கறுவாத் தோட்டங்கள் பரவலாயின ( )

30) பிரித்தானியர் ஆட்சியில் பண்டைய நீர்ப்பாசனத் திட்டங்களைப் புனரமைத்தல் தொடர்பாகப் பின்வரும் கூற்றுக்களில் எது/ எவை சரியானது/ சரியானவை

A) பிரௌன்றித் ஊறுபொக்க கிரம ஆகிய நீர்ப்பாசனத் திட்டங்களைப் புனரமைப்பு செய்தார்.

B) ஹென்றிவாட், வரண்ட வலயத்தில் பண்டைய குளங்களைப் புனரமைப்பு செய்யும் ஒரு வேலைத்திட்டத்தை ஆரம்பித்தார்.

C) கிரகெரி, கிராமக் குளங்களைப் புனரமைப்பு செய்யும் வேலைத்திட்டம் ஒன்றை ஆரம்பித்தார்.

D) கோர்டன், கலாவாவியைப் புனரமைத்தார். ( )

- **இல 31 – 35 வரையிலான வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்து அடைப்புப் புள்ளிக்கோட்டில் அதன் இலக்கத்தை எழுதுக.**

31) எலகர கால்வாயினை அமைத்தவன் யார்?

1. வசபன் 2. தாதுசேனன் 3. 1ம் மொகலன்
4. 1ம் அக்ரபோதி 5. 1ம் சேனன் ( )

32) நிஸங்க மல்லன் தென்னிந்தியாவிலுள்ள எப்பிரதேசத்தின் மீது படையெடுத்தான்.

1. மகாவலிபுரம் 2. மதுராபுரம் 3. சோமேஸ்வரம்
4. இராமேஸ்வரம் 5. அதிவீரராம பட்டினம் ( )

33) விஜிக புரவில் நடந்த போர் எந்த மன்னர்களுக்கிடையிலானது.

1. சேனன் - குத்திகன், சூரதிஸ்ஸன் 2. எல்லாளன், துட்டகாமினி
3. பீதியன், வட்டகாமினி 4. குட்டபாரிந்த, தாதுசேனன்
5. காலிங்கமாகன், 3ம் விஜயபாகு ( )

34) சோல்பரி யாப்பின் கீழ் இலங்கைக்குச் சுதந்திரம் வழங்குவதற்கான சட்ட மூலம்.

1. இலங்கை சுதந்திரச் சட்டம் 2. சோல்பரிச் சட்டம் 3. தரிசு நிலச் சட்டம்
4. மாகாணச் சபைச் சட்டம் 5. மாநகர சபைச் சட்டம் ( )

35) 1948 யாப்பின் படி முடியின் பிரதிநிதியாக அமர்த்தப்பட்ட பதவி.

1. ஆளுநர் 2 பிரதமர் 3. ஒம்புஸ்மன்
4. ஆளுநர் நாயகம் 5. எதிர் கட்சி தலைவர் ( )

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

www.agaram.lk

- **இல 36 – 40 வரையுள்ள வினாக்களில் இரண்டு கூற்றுக்கள் வீதம் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினா தொடர்பாகவும் உள்ள கூற்றுச் சோடிகளுக்குக் கீழே உள்ள அட்டவணையில் காணப்படும் 1, 2, 3, 4, 5 என்பவற்றில் மிகவும் பொருந்துவதை எதுவென்பதைத் தெரிந்து அதன் இலக்கத்தை புள்ளிக்கோட்டில் எழுதுக.**

| | முதலாவது கூற்று | இரண்டாவது கூற்று |
|---|---|---|
| 1. | சரியானது | பிழையானது |
| 2. | சரியானது | சரியானது |
| 3. | பிழையானது | பிழையானது |
| 4. | பிழையானது | சரியானது |
| 5. | சரியானது | சரியானதும் முதல் கூற்றினை நன்றாக விளக்குவதாகும். |

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| 36) | இந்து சமுத்திரத்திலுள்ள இயற்கைத் துறைமுகங்களில் திருகோணமலையே பெரியதும் பாதுகாப்புடையதுமாகும். | இலங்கையின் புராதன கால வரலாற்றிலே திருகோணமலை மஹாதித்த என்று குறிப்பிட்டது. ( ) |
| 37) | லீலாவதி நிஸ்ஸங்கமல்லனின் பட்டத்தரசி ஆவாள். | மிகக் கூடிய சாசனங்களை நிறுவிய அரசன் நிஸங்க மல்லன் ஆவான். ( ) |
| 38) | கண்டி மீது 1546 இல் நடைபெற்ற போர்த்துக்கேயரின் முதலாவது படையெடுப்புக் நொறொஞ்ச தலைமை தாங்கினார். | கண்டி மீதான 1803 இல் நடைபெற்ற முதலாவது பிரித்தானிய படையெடுப்பு கப்ரின் மெக்டோவலின் தலைமையில் நடந்தது. ( ) |
| 39) | வலான சித்தார்த்த தேரர் இரத்மலானவை பரமதம்ம சேத்திய பிரிவெனாவை அமைத்தர். | ஹிக்கிடுவ ஶ்ரீ சுமங்கல தேரர் இரத்மலானை ஶ்ரீ தர்மலோக தேரர் ஆகியோர் முறையே வித்தியோதய வித்தியாலல்கார பிரிவெனாக்களைத் தாபித்தனர். ( ) |
| 40) | வீதிகளை அமைப்பதன் மூலம் பிரித்தானியரின் இராணுவக் கட்டுப்பாடு கண்டி மீது உறுதியாக ஏற்படுத்தப்பபட்டன. | 19ம் நூற்றாண்டில் வீதிகளை அமைப்பதில் மேஜர் தொமஸ் ஸ்கின்னர் பங்கு மகத்தானது. ( ) |

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!



agaram.lk

www.agaram.lk

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## ஐந்தாம் தவணைப் பரீட்சை - 2022
## Conducted by Field Work Centre, Thondaimanaru.
## 5th Term Examination - 2022

FWC

இலங்கை வரலாறு II
Sri Lankan History II

Gr -13 (2022) | 25 | T | II

## பகுதி II

**அறிவுறுத்தல்கள் :**

- **முதலாம் வினா கட்டாயமானது.**
- **அத்துடன் பகுதி B இலிருந்து ஒரு வினாவையேனும் பகுதி C இலிருந்து ஒரு வினாவையேனும் தெரிவு செய்து எல்லாமாக மூன்று வினாக்களுக்கு விடை தருக. (முதலாம் வினா உட்பட விடையளிக்க வேண்டிய வினாக்களின் மொத்த எண்ணிக்கை நான்கு ஆகும்).**
- **முதலாம் வினாவுக்கு விடை அளிப்பதற்கு இலங்கையின் புறவுருவப்படம் வழங்கப்படும்.**

## பகுதி A

01) உமக்கு வழங்கப்பட்டுள்ள புறவுருவப்படத்தில் கீழே தரப்பட்டுள்ள எல்லா இடங்களையும் குறித்துப் பெயரிடுக.

1. மகாதித்த
2. கோகண்ண
3. பொம்பரிப்பு
4. அநுராதபுரம்
5. களனி கங்கை
6. மகியங்கன
7. பராக்கிரம சமுத்திரம்
8. நல்லூர்
9. சீதாவாக்கை
10. காலி
11. மட்டக்களப்பு
12. ஊவா மாகாணம்

(12 x 1 = 12 புள்ளிகள்)

## பகுதி B

02) "மகா வம்சம் கூறும் விடயங்கள் கல்வெட்டு மூலதாரங்கள் ஊடாக பெரும்பாலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது."

1) மகா வம்ச ஆசிரியரின் பெயரை தருக.
2) மகா வம்சம் எநத மன்னனை பற்றி அதிகமாக புகழ்ந்துறைக்கின்றன.
3) மகா வம்சத்தின் குறைபாடு என நீர் கருதும் விடயங்களை சுருக்கமாக குறிப்பிடுக.
4) மேலே கூறப்பட்ட கூற்றின் அடிப்படையில் பண்டைய இலங்கையின் அரசியல் பொருளாதார தகவல்களை கல்வெட்டுக்கள் உறுதிப்படுத்தும் ஆற்றை விளக்குக.

(1 + 1 + 5 + 9 = 16 புள்ளிகள்)

03) "உலகில் வேறெந்த நாடுகளிலும் காணப்படாத அளவிற்கு நீர்ப்பாசன திட்டங்கள் இலங்கையில் மன்னர்களால் மேற் கொள்ளப்பட்டுள்ளன"

1) நீர்ப்பாசன விருத்திக்கு அதிக சேவையாற்றிய மன்னர்கள் இருவரை பெயரிடுக.
2) கி.பி 3ம் நூற்றாண்டில் இருந்து 6ம் நூற்றாண்டின் இறுதி வரை குளங்கள், கால்வாய்களை அமைப்பதில் இலஙகை அரசர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளையும் அவற்றிற்கு அவர்கள் பின்பற்றிய தொழிநுட்ப திறன்களை விரிவாக விளக்குக.

(2 + 14 = 16 புள்ளிகள்)

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk



agaram.lk

www.agaram.lk

04) பொலன்னறுவைக்கால அரசர்கள் ஒப்பிட்டளவில் அநுராதபுரகாலத்து அரசர்களை விட அதிகமான வெளி நாட்டு தொடர்புகளை கொண்டிருந்தனர் இந்த வகையில் பின்வரும் தலைப்புக்களில் கீழ் அவர்களின் அயல் நாட்டு கொள்கையை பரிசிலிக்குக.

1) வெளி நாடுகளின் மீதான படையெடுப்பு
2) திருமண உறவு
3) பண்பாட்டு தொடர்பு

(16 புள்ளிகள்)

05) பின்வருவனவற்றில் எவையேனும் இரண்டிற்கு அவற்றின்வரலாற்று முக்கியத்துவம் தொடர்பாகச் சிறுகுறிப்பு எழுதுக.

1) அநுராதபுர காலத்தில் இடம் பெற்ற தென் இந்திய படையெடுப்பு
2) கோட்டைக் கால கல்வி
3) ஆரிய சக்கரவர்த்தி வம்சம்
4) தம்பதெனிய காலத்து இலக்கியம்

(8 + 8 = 16 புள்ளிகள்)

## பகுதி – C

06) இலங்கையின் கரையோர மாகாணங்களில் மேல்வருவன தொடர்பான போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் கடை பிடித்த நிர்வாக கொள்கைகளை ஒப்பிட்டு பரிசீலனை செய்க.

1) குறிக் கோள்கள்
2) மத்திய நிர்வாகம்
3) மாகாண நிர்வாகம்

(16 புள்ளிகள்)

07) 1817 – 18 ஆகிய காலத்தில் கண்டியில் நடைபெற்ற போராட்டம் இலங்கையில் பிரித்தானியருக்கு எதிராக ஏற்பட்ட பெரும் கிளர்ச்சியாகும்.

1) 1817 இற் கிளர்ச்சி தொடங்கிய இடத்தின் பெயரைக் குறிப்பிடுக.
2) கிளர்ச்சிக்குத் தலைமை தாங்கிய இருவரின் பெயர்களை குறிப்பிடுக.
3) அக் கிளர்ச்சிக்கு ஏதுவான காரணங்களைப் பற்றி ஒரு சுருக்கமான விளக்க குறிப்பு எழுதுக.

(1 + 2 + 13 = 16 புள்ளிகள்)

08) கோல்புறூக் - கமறன் குழுவினரால் முன்வைக்கப்பட்ட அரசியலமைப்பு நிர்வாகம், நீதித் துறை தொடர்பான சீர்திருத்தங்களின் முக்கியத்துவத்தை ஆராய்க.

(16 புள்ளிகள்)

09) பின்வருவனவற்றில் எவையேனும் இரண்டிற்கு சிறு குறிப்பு எழுதுக.

1) சோல்பரி அரசியல் அமைப்பு
2) டொனமூர் அரசியல் அமைப்பு
3) பௌத்த சமய மறுமலர்ச்சி
4) 1848ம் 2ம் சுதந்திர போராட்டம்

(8 + 8 = 16 புள்ளிகள்)

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!


agaram.lk

**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**


**ஐந்தாம் தவணைப் பரீட்சை - 2022**

**Conducted by Field Work Centre, Thondaimanaru.**

**5th Term Examination - 2022**

FWC

**இலங்கை வரலாறு**




Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!